விலை சதம் 10

# சுதந்திரன்
SUTANTIRAN

வ. ஆ. 2001, சித்திரை 4 உ வெள்ளி (17-4-70) ஸபர் பிறை 10— புத்தகம் 24 இதழ் 14

1970 பொதுத்தேர்தலில்

# தமிழ் பகுதிகளில் தமிழரசுக்கே! பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும்!

## சென்னை தினமணி தீர்க்கதரிசனம்!

"தமிழ் காங்கிரஸ் என்ற சிறிய அமைப்பு சேனநாயக்கா கட்சியுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டிருக்கிறது. எனினும் தமிழர் வாழ் பகுதிகளில் தமிழரசுக் கட்சிக்குத்தான் பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமென்பது விஷயம் அறிந்தவர்களின் மதிப்பீடு."

இவ்வாறு இலங்கைப் பொதுத் தேர்தல் பற்றி சென்னையிலிருந்து வெளிவரும் 'தினமணி' 14-4-70 ஏடு எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

இத்தலையங்கத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

தமிழர் மிகுதியாக வாழ்பவை வடக்கு கிழக்கு மாகாணங்கள். அங்கே நடைமுறையில் சுயாட்சி இருக்கக்கூடிய வகையில் மாவட்ட சபைகள் மசோதாவைக் கொண்டுவர சேனநாயக்கா ஒப்புக்கொண்டதுண்டு;

ஆனால் தமது கட்சியிலுள்ள தீவிரவாதிகளை திருப்தி செய்விப்பதற்காக அவர் அதற்கான மசோதாவைக் கைவிட நேரிட்டது. அதன் பேரில் அவரது அமைச்சரவையிலிருந்து திருச்செல்வம் என்ற சமஷ்டி கட்சி மந்திரி விலகி விட்டார்.

சிங்களவரைப் போலவே தமிழருக்கும், மொழியுரிமை

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழினம் தாழ்ந்துபோனதற்கு காரணஸ்தர் யார்?

## குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொள்கிறார்!



சிங்கள மக்கள் மீதும் திரு. டி. எஸ். சேனநாயக்கா மீதும் நான் கொண்டிருந்த ஒரு நம்பிக்கையின் பேரில் எனது சம்மதத்தை கொடுத்திராவிடின், மொழி, இன அடிப்படையில் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டப்பட்டிருக்காது: 1947ம் ஆண்டின் இலங்கை சுதந்திரச்சட்டம் நிறைவேறியிருக்காது; தமிழ் பேசும் மக்களுக்கு இன்றைய பயங்கர நிலைஏற்பட்டிராது; என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

சேனநாயகா அமைச்சரவைக்கு எனது சம்மதத்தை கொடுத்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களைபயங்கர ஆபத்தில் சிக்கவைத்ததில் நானும் பங்குகொண்டேன் என்பதையிட்டு நான் வருந்துகிறேன்.

"1947ம் ஆண்டு மனிதர்களைப்பற்றியும் பிரச்சினைகளைப்பற்றியும் நான்போட்ட கணக்கும் எனது நடவடிக்கைகளுமே இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை அவர்களது இன்றைய பரிதாப நிலைக்குகொண்டுவந்துள்ளது என்பதைநான் உணர்கிறேன்"

—மாஜி யூ. என். பி. அமைச்சரும் மாஜி வவுனியா எம்; பி. யும் மாஜி அடங்காத்தமிழர் முன்னணி தலைவரும்-இன்றைய (அ)சைவப்பாதுகாவலரும், மூதூரில் 423 வாக்குகளைப் பெற்று கட்டுக்காசிழந்து புதிய றெக்கோட் ஏற்படுத்தியவரும் 150 வீதமுளை தமக்கேயுண்டென பெருமைப்படுபவருமான திரு. செ. சுந்தரலிங்கம் 1956ம் ஆண்டு மேமாதம்11ந்திகதி தமிழரசு தந்தைதிரு. சா. ஜே. வே. செல்வநாயகத்திற்குஎழுதியிருந்த கடிதமொன்றில் இப்படிக் கூறியுள்ளார்!

தேர்தலில் கடமையாற்ற

# வடக்கே தமிழரை அனுப்புவதற்கு வாலறுந்த நரி கடும் எதிர்ப்பு!


## சிங்கள ஊழியரே வேண்டுமென தேர்தல் ஆணையாளரிடம் மன்றாட்டம்!

கொழும்பு, ஏப் : 16

வடபகுதி தேர்தல் வேலைகளைக் கவனிக்க தமிழ் அரசாங்க ஊழியர்களை அனுப்புவதற்கு முன்னாள் யூ. என்; பி. அமைச்சரும் 'வாலறுந்த நரி' யென்று அழைக்கப்படுபவருமான தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் தேர்தல் ஆணையாளரிடம் கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார் என்று தெரிகிறது.

தமிழ் ஊழியர்களுக்குப் பதில் சிங்கள ஊழியர்களையே தேர்தல்வேலைகளுக்குவடபகுதிக்கு அனுப்பும்படி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்த இவர், இறுதியில்

(4-ம் பக்கம் பார்க்க)




குத்திய பச்சையை அழிக்கமுடியுமா?

# இரும்பு மனிதரைத் தாக்க காங்கிரஸ் காலிகள் முயற்சி!

## கல்வியங்காடு கூட்டத்தில் கல், போத்தல் வீச்சு!

நல்லூர், ஏப். 16

தமிழ் காங்கிரசுக்கு அடுத்த பொதுத் தேர்தலுடன் சமாதி கட்டுவதற்கு தமிழ் மக்கள் முடிவுசெய்து விட்டனர் என்பதை தெளிவாக உணர்ந்துகொண்ட தமிழ் காங்கிரஸ் காடையர்கள் இப்போது தொகுதிதோறும் தமிழரசு வேட்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிராக வன்முறைத் தாக்குதலில் இறங்கியுள்ளனர்.

சென்ற வார இறுதியில் கல்வியங்காட்டில் டாக்டர் இ. மு. வி. நாகநாதனை ஆதரித்து நடந்த கூட்டத்திலும் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது காங்கிரஸ் காடையர்களால்!

இக்கூட்டத்தில் தமிழரசு ஆதரவாளர்கள் பலர் கற்களால் தாக்கப்பட்டனர். டாக்டர் நாகநாதனுக்கு குறிவைத்து வீசப்பட்ட மண் அடைத்த போத்தல் ஒன்று கட்சித் தொண்டர்கள் இருவர் மீது பட்டு அவர்களைக் காயப்படுத்தியது. டாக்டரை காப்பாற்றிவிட்டோமென்று பெருமையடைந்தனர் அவ்விருவரும்.

நல்லூர்சந்தையில் நடந்த கூட்டத்தையொட்டி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பிரமாண்டமான ஊர்வலத்தில் அழைத்துவரப்பட்ட சமயம் திருநெல்வேலி சந்தியில் வைத்தும் கற்களும் போத்தல்களும் வீசப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

காயம் அடைந்த தமிழரசு தொண்டர்கள் கட்டுப் போட்டுக் கொண்டுயேடையிலமர்ந்திருந்ததைக் கண்ட பொதுமக்கள் காங்கிரஸ்காரர்களின் வெறித்தனத்துக்கு மே 27ல் சாவு மணியடிப்போம் என்று பேசிக்கொண்டனர்.

# "யூ. என். பி-தமிழரசு ஒத்துழைப்புக்கு இனி துளியும் இடமில்லை"

## தமிழரசுத் தலைவர் அறிவிப்பு

களுவாஞ்சிக் குடி, ஏப்; 16;

"யூ. என். பிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே அரசியல் ரீதியில் எதிர்காலத்தில் இனி எந்தவிதமான உறவும், ஒத்துழைப்பும் ஏற்படுவதற்கு துளியும் இடமில்லை; யூ; என். பிக்கு இனி தமிழரசுக்கட்சி ஒருபோதும் ஆதரவு அளிக்கக் கூடாது என்பதே எனது கருத்தாகும்."

இவ்வாறு தமிழரசுத் தலைவர் திரு; சி. மு; இராசமாணிக்கம் பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் அழுத்தந்திருத்தமாக தெரிவித்தார்.

திரு. இராசமாணிக்கம் மேலும் கூறியதாவது:-

'வடக்கு மாகாணத்தில் தமிழ்காங்கிரஸ்மூலமும் கிழக்குமாகாணத்தில் நேரடியாகவும் வேட்பாளர்களை நிறுத்தி ஐ. தே. கட்சி ஆசனங்க

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## பிரதமரின் பிரலாபம் (2)

தமிழ் பேசும் மக்கள் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதி
கள் இருபது பேரையும் அனுப்பியும் என்ன பயன்?
இருபது பேரும் சென்றாலும் அவர்களால் அரசாங்கம்
ஒன்றை ஒரு போதும் அமைக்க முடியாதேயென்று
யூ. என். பி. பிரசாரக் கூட்டங்களில் திரு. டட்லிசேன
நாயகா கூறியிருக்கிறார்.

தொன்மை மறவேல் என்பது ஔவையார் வாக்கு.
ஆனால் 1960ம் ஆண்டுக்குப் பின் நடந்து வரும் அரசி
யல் சம்பவங்களையெல்லாம் அடியோடு மறந்துவிட்டு—
அல்லது மறைத்துவிட்டு பிரதமர் பிரலாபிக்கத் தொடங்
கியிருக்கிறார்!

பிரதமர் மறந்தாலும், அல்லது மறைத்தாலும்
உண்மை உண்மைதான்: அதை இந்நாட்டுத் தமிழ்
பேசும் மக்களுக்கு மூடி மறைத்துவிட முடியாது.

இந்நாட்டு அரசியலில் வல்லமையற்ற—சக்தியற்ற
கட்சியென்று இன்று பிரதமர் எந்த தமிழரசுக் கட்சியை
சாடுகிறாரோ இதே தமிழரசுக் கட்சியிடம்தான் 1960ம்
ஆண்டு பங்குனி மாதம் ஆட்சியமைப்பதற்கு உதவி
கோரி தூது அனுப்பினார் என்ற உண்மையை நாடு
மறந்துவிடவில்லை.

1960ம் ஆண்டு பங்குனி மாதம் தமிழினத்தின்
சார்பில் தமிழரசுக் கட்சி தம்மிடம் சமர்ப்பித்த
குறைந்தபட்சக் கோரிக்கைகளைகூட ஏற்றெடுத்தும் பார்க்க
மாட்டேன் என்று ஆணவத்துடன் அறிவித்தார் திரு.
டட்லி சேனநாயகா! இதன் பயன் என்ன?

எந்தத் தமிழரசுக் கட்சியை இன்று சுண்டைக் காய்க்
கட்சியென்று பிரதமர் கேலி பேசியிருக்கிறாரோ
அதே தமிழரசுக் கட்சியின் அரசியல் பலத்தால் அன்
றைய யூ. என். பி. ஆட்சி வேரோடு சாய்க்கப்பட்டது.

இந்த அரசியல் பாடத்தை— 10 ஆண்டுகளுக்குள்
பிரதமர் மறந்து விட்டது அவரது அரசியல் வாழ்வின்
அழிவின் தொடக்கம் என்றே நாம் கருதுகிறோம்.

அதன் பின்னர் நடைபெற்றதென்ன?

தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும்
எதிராக 1960 ஜூலைத் தேர்தலில் சிங்கள இனவெறியை
தூண்டிவிட்டு தேர்தல் பிரச்சாரத்தை நடத்தியது
யூ. என். பி.!

இதனால் ஆக முப்பதே முப்பது இடங்களைப் பெற்று
தோல்வியைத் தழுவிக்கொண்டது!

யூ. என். பிக்கு இந்தப் படு தோல்வியை அன்று
தேடிக்கொடுத்தவர்கள் பிரதமரால் இன்று கிண்டல்
செய்யப்படும் தமிழரசுக் கட்சியும் தமிழ் பேசும்
மக்களும்தாம்.

இந்த மறக்கமுடியாத பாடத்தையும் பத்து ஆண்டு
களுக்குள் மறந்துவிட்டார் திரு. டட்லி சேனநாயகா!

இதன் பின்னர் நடந்தது என்ன?

1965 ஆண்டு மார்ச் பொதுத்தேர்தல் முடிவடைந்த
வுடன் தமிழரசுக் கட்சியும் தமிழ் பேசும் மக்களும்
இந்நாட்டு அரசியலில் பெற்றிருந்த வல்லமையை—
வகித்த கேந்திர ஸ்தானத்தை — யாரும் இதற்குள்
மறந்துவிட்டிருக்க முடியாது—பிரதமர் திரு. டட்லி
சேனநாயகாவை தவிர!

இந்நாட்டு இரு பெரும் சிங்களக் கட்சிகளும் தமிழ
ரசுத் தந்தையிடம் ஆட்சியமைக்க உதவும்படி ஆதரவு
கோரி 1965ம் ஆண்டு பங்குனி மாதம் மண்டியிட்ட
காட்சி தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களிலே பசுமை
யாக இருக்கிறது.

ஆட்சியமைப்பதற்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவை
யும் ஒத்துழைப்பையும் தெரிவிக்கும் தந்தை செல்வா
வின் கடிதத்தை பெறுவதற்கு திரு. டட்லி சேனநாயகா
1965 பங்குனியில் காத்து நின்ற காட்சி பொய்யாய்
கனவாய் பழங்கதையாய் போய்விடவில்லை!

தமிழரசுக் கட்சி மட்டும் 1965 பங்குனியில் யூ.
என். பி. யுடன் கூட்டுச் சேர்ந்து தேசிய அரசை
அமைப்பதற்கு இணக்கம் தெரிவிக்க மறுத்திருந்தால்
யூ. என். பியின் அரசியல் வாழ்வு அன்றே முடிந்திருக்
கும்! திரு. டட்லிசேனநாயகா பிரதமர் கதிரையை
எண்ணிக்கூட பார்த்திருக்க முடியாமல்போயிருக்கும்!
தேசிய ஒற்றுமை, உணவுற்பத்தியென்று தமுக்கடித்
துக் கொண்டு யூ. என். பி. இன்று நாட்டில் நடமாடிக்
கொண்டிருக்க முடியாது!

ஆகவே தமிழரசுக் கட்சியால் பதவிக்கு வந்து—
தமிழரசுக்கட்சியின் உதவியால் அழிவின் விளிம்பில் நின்று
கொண்டிருந்த யூ. என். பிக்கு உயிர் கொடுத்த திரு.
டட்லிசேனநாயகா—இன்று அதே தமிழரசுக் கட்சியுடன்
போதி—தீட்டிய மரத்திங் கூர்பார்க்க விரும்புகிறார்
என்றால் அவர் அரசியல் ரீதியாக மீண்டும் அழிவின் சன்னி
தானத்திலே நிற்கிறார் என்றே நாம் கருதுகிறோம்.

தமிழரசுக் கட்சியினர் அனைவரையும் கூட்டாக
ஒட்டு மொத்தமாக பாராளுமன்றத்துக்கு அனுப்புவ
தால் சிங்களக் கட்சிகள் தமிழ் பேசும் மக்களின்
கோரிக்கைகளுக்கு இணங்கியே தீரவேண்டிய ஒரு நிலை
இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையை
உடைத்தெறிந்து தமிழ் பேசும் மக்களையும் தமிழரசுக்
கட்சியையும் பிரிந்து விட்டால் தமிழ் பேசும் மக்களை
மீளா அடிமைகளாக ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தின்
கீழ் வைத்துக் கொண்டிருக்கலாம்; தமிழ் பிரதேசத்
தில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழ் பேசும் மக்களை
அவர்களது சொந்த தாயகத்திலேயே அடிமைகளாக்கி
அழித்துவிடலாம்; என்று சிங்கள யூ. என். பி. கட்சி
திட்டமிடுகிறது; அதற்கு ஒத்துபாடுகிறார்கள் தமிழ்
காங்கிரஸ் கங்காணிகள்!

யூ. என். பி—தமிழ் காங்கிரஸ் கூட்டாக விரித்
துள்ள இந்தச் சூழ்ச்சி வலையில் தமிழினம் சிக்கிவிட
மாட்டாது என்பதை இப்போதே கூறிவைக்கிறோம்.

# சுயாட்சிக் கழகத் தலைவரை நோக்கி சுடச்சுடப் பதினாறு கேள்விகள்!

## திராணியிருந்தால் இவற்றுக்கு பதில் சொல்லட்டும்!

சுயாட்சிக் கழகத்தலைவர் திரு. வி. நவரத்தினத்தை நோக்கிப் பின்வரும் பதினைந்துகேள்விகளை அனலைதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்த கா. சிவஞானம் என்ற அன்பர் விடுக்கிறார். முடியுமானால் திரு. நவரத்தினம் இக் கேள்விகளுக்கு தமது கட்சிப்பத்திரிகையில் பதில் சொல்லுவாரா என்று ஊர்காவற்றுறைத் தொகுதி வாக்காளன் என்றமுறையில் சவால் விடுகிறார் திரு. சிவஞானம்.

திரு. சிவஞானம் விடுக்கும் கேள்விகள் இதோ:—

1. அமரர் வன்னியசிங்கம் அவர்கள் காட்டிய பாதையில் நின்று தமிழரசுக் கட்சி தவறிவிட்டதென விதண்டாவாதம் புரியும் தலைவரே அமரர் வன்னியசிங்கம் எப்போவாவது தனித் தமிழ் நாடு கோரினாரா?

2. மன்னாரில்நடைபெற்ற தமிழரசுக்கட்சி மகா நாட்டின்போதுமலைநாட்டுத் தமிழருக்கா தோட்டப் பகுதிகளில் கழகங்கள் அமைக்க வேண்டுமென தலைவர்கள் தீர்மானம் கொண்டுவந்தபோது தாங்கள் அதை எதிர்த்து இலங்கைத் தமிழரசுக் கட்சி வடகிழ் மாகாணத்தில் உள்ள தமிழர்களின் ஓர் விடுதலை இயக்கமே தவிர அது மலைநாட்டில் கழகங்கள் அமைத்து தோட்டத் தொழிலாளர்களுக்காக பாடுபடத் தேவையில்லையென பகிரங்க அறிக்கையை அன்று வெளியிட்ட தாங்கள் இன்று அவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிப்பதன் அர்த்தமென்ன?

3. முன்னை நாள் ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. வே. அ. கந்தையா காலமானபோது இடைத்தேர்தலில் போட்டிக்கு நிறுத்துவதற்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் பெயரே பல தமிழரசுக் கட்சி கிளைகளினால் ஒரேமனதாக தெரிவு செய்யப்பட்ட தலைமை பீடத்திற்கு சிபார்சு செய்யப்பட்டது. அதையே தலைவர்களும் விரும்பி அவரையே பேட்டியிட அனுமதிக்க முற்பட்டபோது தலைவர் செல்வநாயகத்திடம் தாங்கள் கட்சியின் கட்டுப்பாட்டை மீறுது கட்சியின் கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்று உறுதியளித்ததினால் தந்தை செல்வா மற்றத் தமிழரசுத் தலைவர்களிடம் உமக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கும்படி கூறினார். அதன் பேரிலேயே கட்சி அனுமதி வழங்கியது.

நீர் கொடுத்த உறுதிமொழிபடி எப்போது கட்சியின் கட்டுப்பாட்டை மீறினீரோ அப்போது உமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை உதறித்தள்ளிவிட்டுக் கட்சியின்இலட்சியத்துடன் உமது இலட்சியத்தையும் வைத்து போட்டியிட்டு மக்கள் தீர்ப்பிற்கு விட்டிருக்கவேண்டும். அப்படி செய்திருந்தால் தான் நீர் உண்மையான அரசியல்வாதி என்பது புலனாகும்.

4. அன்று சமஷ்டி அரசியல் அமைப்புத்தான் சிறந்த வழி. அதனால் தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழமுடியுமென்று கூறிய தாங்கள் இன்று டொமினியன் தமிழ் நாடுதான் சிறந்த வழியென்று கூறுகிறீர்கள். நானோ ஒற்றை யாட்சியின் மூலம் தான் விமோசனம் உண்டென்று கூறினாலும் தமிழ் மக்கள் வியப்படைய மாட்டார்கள். ஏனெனில் நீர் ஓர் அரசியற் சந்தர்ப்பவாதி யென்பதை உணர்த்திவிட்டீர்.

5. தாங்கள் பாராளுமன்ற அங்கத்தவராயிருந்தகாலத்தில் தமிழில் ஒரு சொல்லாவது பேசியுள்ளீரா? அப்படிச் செய்யத் தவறிய நீர் எப்படி எங்கட்கு தமிழ் உரிமை பெற்றுத் தருவீர்?

6. கட்சியின் பொதுச்சபை கூடி உம்மை வெளியேற்றத் தீர்மானம் கொண்டு வந்த போது உமது சகா பாலசிங்கம் தொலைபேசியில் தொடர்புகொண்டு உம்மை கூட்டத்திற்கு வரும்படி கேட்டபோது நீர் குற்றத்தை ஒப்புக்கொண்டு பேசாதிருந்தீர்!

7. தந்தை செல்வநாயகம் டட்லி சேனநாயக்காவிடம் செய்துகொண்ட ஒப்பந்தம் தமிழருக்கு விரோதமானதென்றும் அதை வெளியிடவா என்றும் பூச்சாண்டி காட்டும் நீர் அந்த ஒப்பந்தத்தினால் வருகிற தீமையை எடுத்துக் கூறி கட்சியை விட்டு வெளியேறியிருக்கலாமே! அதைவிடுத்து ஏன் 3½ வருடகாலம்தேசிய அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டு இருந்தீர்?

8. எங்கள் அமைச்சர் திருச்செல்வம் மந்திரிப் பதவி பெற்றதன் மூலம் டட்லிக்கு தமிழரை விற்றுவிட்டார் என்று கூறும் நீங்கள் அவரை மாலை சூட்டி வரவேற்று உள்ளூராட்சி அமைச்சரென்ற ரீதியில் தீவுப் பகுதியின் பல பாகங்கட்கு ஏன் அழைத்துச் சென்றீர்?

9. நீங்கள் உங்கள்கட்சியின் கொள்கைகளை விளக்கி வாக்குப்பெற முற்படாது தமிழரசுக் கட்சியையும் தலைவர்களையும் திட்டி வருவது உங்கள் கட்சியிடம் ஓர் கொள்கை லட்சியம் எதுவும் கிடையாதென்பதை உணர்த்துகின்றது.

10. தமிழரசுக்கட்சியின் தளபதி அமிர்தலிங்கம் காலிமுகக் கடற்கரையில் சத்தியாக்கிரகம் செய்து இரத்தம் சிந்தினார்; சிங்கள சிறீ எதிர்ப்பு போராட்டத்தில் இரத்தம் சிந்தினார்; முன்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சரான இலங்கரத்தின யாழ்ப்பாணம் வந்தபோது கறுப்புக்கொடி காட்டி பொலிசாரால் தாக்கப்பட்டு அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாகினார்; ஆனால் தாங்களோ தமிழ் மக்களின் எந்த ஒரு போராட்டத்திலும் கலந்துகொண்டு ஒரு சொட்டு இரத்தமாவது சிந்தினீர்களா?

அமிர்தலிங்கம் அவர்கள் எந்த ஒரு போராட்டத்திற்கும் முன் நின்ற படியால் அவருக்கு தளபதியென்ற பட்டத்தைச் சூட்டினர் மக்கள். நூற்றுக்கு நூறு அமிர்தலிங்கம் அவர்கட்கு அப்பட்டத்தைக்கொடுத்தது பொருத்தமே ஆனால் நீரோ கட்சியின் ஆக்கபூர்வமான செயல்கள் எதிலும் தலையிட்டு நடத்தாது மற்றவர்களை குறை கூறுவதில் கெட்டிக்காரனென்றபடியால் உமது சகா தினபதி ஆசிரியர் மூளையென்று பட்டம் சூட்டினாரா?

11. நீங்கள் பாராளுமன்றப் பிரதிநிதியாய் இருந்த காலத்தில் என்ன செய்தீர் என்பதை உம்மால் கூற முடியுமா? உமக்கு கார் அன்பளிப்புச் செய்தோருக்கு மாத்திரமே நீர் பாராளுமன்ற உறுப்பினராயிருந்தீர்!

12. புளியங்கூடலில்நடைபெற்ற போது மேடை விவாதத்தில் அமிர்தலிங்கம் ஒரு மணித்தியாலம்பேசியபோது எவரையும் தாக்கிப் பேசவில்லை: ஆனால் நீர் பேசும் போது கொள்கைகளை விளங்கப்படுத்தாது தலைவர் செல்வாவையும் மற்றும் உறுப்பினர்களையும் சிறு பிள்ளைகள் என்று வர்ணித்தீர்! இதிலிருந்து நீர் ஓர் கொள்கையற்றவர் என்பதும் மக்களை ஏமாற்றவே இப்படிச் செய்கின்றீர் என்பதையும் அன்றைய தினம் உணரவைத்து விட்டீர்கள்!

13. மந்திரிகளை மாலை போட்டு வரவேற்கமாட்டேனென்று கூறிய நீர் பட்டுக்குடை பிடித்து திரு. பிரேமதாசாவை அழைத்துச் சென்றதென்ன? டட்லியின் காலை பின் கதவால் சென்று பிடித்து உமது பிள்ளைகள் லண்டனில் கல்வி கற்க ஏற்பாடு செய்தீர்கள்!

14. புளியங்கூடலில் நடைபெற்ற பொது மேடை விவாதத்தில் கொள்கை விளக்கம் கொடுக்கும்படியும் விவாதத்திற்கு குறிப்பிட்ட இரண்டையும் தவிர வேறு ஒன்றையும் பேச வேண்டாமென்றும் தலைவர் திரு. குருசாமி அவர்கள் கூறினார்கள். ஆனால் நீர் தலைவரின் சொல்லுக்கு மதிப்புக்கொடாது நீர் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று வாதாடினீர். இதிலிருந்தே நீர் ஒரு கட்சியில் கொள்கை லட்சியங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பவர் அல்லவென்பதும் கட்சி விலக்கியது சரியென்றும் மக்களை உணரவைத்து விட்டீர்.

15. நீர் கட்சியின் கட்டுப்பாட்டை மீறி தமிழரசுக் கட்சிக்கு எதிராக செயல்பட எப்போ தொடங்கினீரோ அப்போ எங்கள் தளபதி பாராளுமன்றத்தில் நண்பன் நவரத்தினம் அவர்களை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறியது எவ்வளவு உண்மையென்பது புளியங்கூடல் மகாமாரி அம்மன் சன்னிதானத்திற்கு முன்பாக 29-3-70ம் திகதி உமது மனச்சாட்சிக்குப் புரிந்திருக்கும்!

16. ஈழத் தமிழினத்தைக் குழி தோண்டிப் புதைக்க கச்சைகட்டி நிற்பதும், தமிழ் நாட்டின் முதல்வர் கலைஞர் கருணாநிதியை, தமிழர்களின் இதயகமலங்களில் வீற்றிருக்கும் பேரறிஞர் அண்ணாவை—கேவலமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்ததுமான ஏரிக்கரை நிறுவனத்தின் பண மோசடி குறித்து கமிஷன் நியமித்து விசாரணை செய்ய வேண்டுமென எதிர்க் கட்சியினர் தீர்மானம் கொண்டு வந்தபோது அதை ஆதரித்து வாக்களிக்காமல் ஏன் பதுங்கினீர்? தினகரன் உமக்காக பிரசாரம் செய்யும் என்ற சுயநல ஆசையால் இனத் துரோகிகளுக்கு ஏன் துணை போனீர்!

இந்த அற்ப சுயநலத்துக்காக இன்று இப்படிச் செய்த நீர், நாளை தமிழினம் முழுவதையுமே உமது சுயநலத்திற்காக சிங்கள அரசுக்கு விலை பேசி விற்கமாட்டீர் என்பது என்ன நிச்சயம்?

முடியுமானால் இவற்றிற்கு உமது கட்சிப் பத்திரிகையில் பதில்தருவீர்களா?

# வீட்டை' நாடாவிடின் தமிழர்களுக்கு இந் நாட்டில் விடிவேயில்லை!

## செல்வாவின் சுட்டுவிரல் அசைவுக்கு கட்டுப்பட்டது ஈழத்தமிழினம்!

சாவகச்சேரி, ஏப்.16

தமிழரசுக் கட்சியென இங்கும் சமஷ்டியெனச் சிங்கள வரிடையெயும் கூறி இரட்டை வேடம் போடுகிறது. தமிழரசுக் கட்சி என்ற திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் கூற்றிற்கு நான் பல கூட்டங்களில் சாட்டை கொடுத்த பின்னும் கொடிகாமத்தில் யாரோ ஒருவர் சன்னி கண்டவர்கள் உளத்துவது போலப் பேசினராம்.

பாவம்! அவர்களின் தலைவரே யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அமைக்காவிட்டால் தான் அரசியலிலிருந்து விலகப் போவதாகக் காங்கிரசாரின் 25வது மாநாட்டில் சாவகச்சேரியில் கூறியிருக்கிறார். சீ, இவரா தலைவர்? அதுவும், மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த எமக்கா?

தனது நாடு, நகரம் மனைவி முதலியனவற்றை சூதாட்டத்திற்காகப் பணயம் வைத்த பாரதப்போர்த் தலைவன் தருமனைப்போல இலங்கைத் தமிழினத்தைச் சிங்களத்திற்கு அடகு வைத்துவிட்டுப் புத்தியாக விலகப் பார்க்கிறார் தனிப் பெருந் தலைவர்!

ஊரிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள் ''கொளுக்கட்டை தா இல்லாவிட்டால் செக்கிலே பீச்சப் போகின்றேன்'' என்று அதுபோலப் ''இந்துப் பல்கலைக் கழகந் தா இல்லாவிட்டால் அரசியலிருந்துவிலகப் போகிறேன்'' என்கிறார் ஜி. ஜி;

இவர் பலரை மிரட்டுகிறார் இப்படிச் சொல்லி? சிங்களவரையா அல்லது தமிழரையா? ஆனல், யாழ்ப்பாணத்தில் வாக்கு வேட்டைக்காக அவரும் அவரது மனைவியும் மகனும் வீடு வீடாகக் கடை கடையாகத் தெருத் தெருவாகத் திரிகிறார்களே! என்ன யோக்கியதையில் வாக்குக் கேட்கிறார்கள்? கொஞ்சமாவது அரசியல் நாணயம் வேண்டாமா?

'செயற்கரிய செய்வர் பெரியர் என்கிறார்களே! பெருமைக்குரிய அருமையான செயலா இது? தனிப் பெருந் தலைவர் என்றும் தலைசிறந்த வாக்கு வன்மைமிக்க வழக்குரைஞர் என்றும் புகழப்படும் இவரா இப்படி நடந்து கொள்வது?'' நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் தமிழர்கள் கவலைப் படமாட்டார்கள் என்ற தலைமைக் கம்பீரம் வேண்டாமா?

செல்வா ஆணையிட்டார்! சத்தியாக்கிரகம் தொடங்கியது—சிறியை எதிர்த்தார்கள்—கச்சேரி முன் மறியல் செய்தார்கள்-இணைப் பாட்சியின் முதற் படியான மாவட்ட சபைக்கான திட்டங்கள் உருவானது. அத்தனையும் ஆயிரம் மைல் வேகத்தில் செல்லும் பெரும் உந்துக்களையும் சிறு தடக்கி (பிறேக்) தடுத்து நிறுத்தி விடுவது போல மிகவும் ஆற்றல் வாய்ந்த தமிழரசுக் கட்சியின் திட்டங்களைத் தரை மட்டமாக்கியவர் திரு. ஜி. ஜி.யும் அவரது கட்சியினரும்;

எனவே, தன் மானமும் தன்னம்பிக்கையுமிக்க தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை ஏகோபித்த முறையில் அனுப்ப முயற்சிக்கவேண்டும்: தலைமை தாங்கி வழி நடத்துந் தன்மையற்ற—வழிகாட்டியாக இருக்கத் தகுதியற்ற ஒரு மூன்றாந்தரத் தலைவரை நாம் நம்பிடல் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதையாகிவிடும்.

எனவே, 'நாடு நீ அதை நாடு—நாடாவிட்டால் உனக்கேது வீடு?' என்ற பாட்டால் நாட்டினைக் காக்கில் வீட்டினைக் காக்கவேண்டும்;



### பால்மணம் மாறாப் பாலகன் மாறன் முழக்கம்!

ஆதலால், எமது ஈழத் தமிழ் நாட்டினைக் காக்க—என்னைப் போன்ற இளந் தமிழர் சமுதாயம் எழிலுடன் எதிர் காலத்தில் விளங்க சிங்கள ஆதிக்கத்திலிருந்து எம்மைக் காப்பாற்ற இணைப்பாட்சி முறையை விரும்பும் தமிழரசு வெல்ல கடமைவீரராம் நவரத்தினம் அவர்களைப் பல்லாயிரக் கணக்கான வாக்குகளால் வெற்றிபெறச் செய்யக் கேட்டு விடை பெறுகிறேன்.

இவ்வாறு அல்லாறையில் நடைபெற்ற தமிழரசுப் பிரசார கூட்டமொன்றில் 6 வயது பாலகன் செல்வன் செ. மாறன் முழக்கமிட்டான்.

முருகக் கடவுள் திருவுருவத்துக்கு அவமதிப்பு:

# இந்து மாமன்றத்தைக் கூட்டி 'தினபதி' மீது நடவடிக்கையெடுப்போம்!

## வடகொழும்பு இந்துபரிபாலன சங்கத் தலைவர் திரு. கு. கனகரத்தினம் அறிவிப்பு!

1970 ஏப்ரல் 3 வெள்ளிக் கிழமை ''தினபதி'' பத்திரிகையின் முன்பக்கத்தில் வெளிவந்த 'சூரன்போர்' கேலிச் சித்திரம் சைவசமய மக்களின் மனத்தைப் புண் படுத்தும் ஒன்றாகும்.

எந்தக் காரணங்களுக்காகவும் மக்கள் வழிபடும் தெய்வத்தை— தெய்வச் சின்னங்களை கேலிச் சித்திரங்களாக்கிக் காட்டுவது மிகவும் பாரதூரமான குற்றச் செயலாகும்.

சைவ சமயமல்லாதவேறு சமயக் கடவுள் உருவங்களை இது போல் கேலிச்சித்திரம் தீட்டப்பட்டிருந்தால் நிலைமை என்னவாயிருக்கும்?

தட்டிக்கேட்க ஆளில்லாத போது தப்பி சண்டப் பிரசண்டனுவதுபோல், சைவ சமய மக்களின் 'அமைதி' யைப் பயன்படுத்தி இவ்வாறன 'அசட்டு'ச் சித்திரங்களைப் பிரசுரிக்கும் துணிவு தினபதிக்கு ஏற்பட்டிருக்கிறது.

'தினபதி'யின் இச்சித்திர விடயமாக இந்து மாமன்றத்தைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகம் சூரனு? அவர் யாருக்கு எந்தக் கொடுமை இழைத்தார்? தேவர்களை அடிமையாக்க முற்பட்டவன் சூரபத்மன். திரு. செல்வநாயகம் யாரையும் அடிமை கொள்ள முயலவில்லையே.... தமிழ் இனத்தின் ஒற்றுமைக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வரும் அவர், எந்தக் கட்டத்திலும் தமிழ் இனத்துக்கு எந்த இன்னலும் இழைக்க வில்லை......

அரசியல் சூதாட்டத்தில் புனிதத் தன்மையுள்ள வற்றைப் பிணைத்துத் 'தங்கள் காரியங்களை' வெற்றி கொள்ள முயலாதிருக்கும்படி சகலரையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்;

இவ்வாறு வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தலைவர் திரு. கு. கனகரத்தினம் அறிவித்துள்ளார்.

குறிப்பு:—

தினபதியின் 'சூரன்போர்' கேலிச்சித்திரவிடயத்தைத் தனது கவனத்துக்குக் கொண்டு வந்த சுதந்திரனைப் பாராட்டியுள்ள திரு. கு. கனகரத்தினம் வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் செயற்குழுவை இவ்வாரத்தில் கூட்டி இதனை ஆய்வு செய்யப் போவதாகவும் கூட தெரிவித்திருக்கிறார்.

# சந்திர மண்டலத்துக்கு போகும் நாட்களில் சாதி வெறியை ஏன் கிளப்புகிறீர்கள்?

## மாவிட்டபுரத்தில் சுந்தரருக்கு தமிழ் பெண்மணி கொடுத்த சூடு

மாவிட்ட புரத்திலேயே இன்னுமொருவீட்டில்சென்ற சுந்தரர் அங்கிருந்த மூவர்ணக் கொடியையும் தந்தை செல்வாவின் படத்தையும் பார்த்து பின்வருமாறு சொன்னராம்:—

உந்தத் தமிழரசுக் காறரும், கீழ்சாதிப் பயலுகளும். உந்த வேதக் காறச் செல்வநாயகமும் சேர்ந்து எங்கடை மாவைக் கந்தனை என்ன பாடு படுத்தினுங்கள் தெரியுமா. உதை எல்லாம் மறந்திட்டியள் போலை. உந்தச் செல்வநாயகத்தை அனுப்பினல் கோயிலுக்குள்ளை மட்டுமல்ல ஆதி மூலம் மட்டும் கொண்டு போய் விடுவங்கள். அது மட்டுமல்ல உங்கடை வீடுகளுக்குள்ளையும் கொண்டு வந்து விடுவங்கள். அதுக்குப் பிறகு தான் யோசிப்பியள். நான் ஒருதன் இருந்த படியால்த் தான் கந்தனைப் காப்பாற்றினன். இனியும் கோயிலைக் கெடுக்க வேணுமெண்டால் செல்வநாயகத்தை அனுப்புங்கோ என்றாராம்.

அவ்வளவு தான். அங்கிருந்த இளம் பெண் ஒருத்தி ஓடிவந்து, ஐயா மன்னிக்க வேணும். கந்தனைக்காக்க நீங்கள் என்ன சிவனே, அல்லது கந்தன்ரை பொடிகாட்டோ அல்லது கந்தன்ரை வேலைகாறனே. கந்தன் உங்களிட்டை சாதி பார்த்து மறிக்கச் சொல்லிக் கட்டளை இட்டானே' ஐயா நேற்றுத் தான் எலெக்சன் கேட்பதற்காக நீங்கள் கந்தனைக் கண்ட நீங்கள். நாங்கள் பிறந்து வளர்ந்ததே இந்தக் கந்தன்ரை வீதியிலை' நாள் தவருது போய் ஆலயத்திலை வணங்கி வந்தோம். இப்ப எங்களையும் கோயிலுக்கை போகாமல் பண்ணி வைச்சிருக்கிறியள். நாங்கள் வாழுறது இருபதாம் நூற்றாண்டில் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள். மனிதன் சந்திர மண்டலத்துக்கும் போய்விட்டான்- ஆனல் நீங்களோ மனிதன்கோயிலுக்குள்ளை போறதைத் தடை செய்கிறீர்கள் சாதி எங்கை ஐயா இருக்கு.

உங்களுக்கு வெட்கம் இல்லையா? நீங்கள் பாராளுமன்றம் போவதற்கு மக்களை இப்படியா கெடுக்க வேண்டும். உங்களாலை மாவிட்டபுரத்திலை இருக்கிற நாங்கள் மட்டுமல்ல இலங்கையிலை வாழ்கின்ற தமிழ் பேசும் இனம் முழுவதுமே வெட்கப்படவேண்டியிருக்கிறது. பெரிய அவமானத்தைத் தேடிவைத்திருக்கிறீர்கள். பண்டிக்குக் கூடப் பால் கொடுத்தவன் ஐயா எங்கள் கடவுள். நீங்கள் இல்லாதிருந்தால் சாதிப்பிரச்சினையே இல்லாதிருந்திருக்கும். போயிற்று வாருங்கோ. உங்கட்கு இதை எல்லாம் சொல்ல நாங்கள் காத்திருந்தோம். என்று சொல்லி ஒரே பேச்சாக முடித்து விட்டாராம்.

## தமிழர் என்ன நாய்களோ?

'செங்குட்டுவன்'

அடிமையா... கொடுமையா... மிடிமையா...

சொந்த நாட்டில் நாங்களின்று சிங்களத்திற் கடிமையா?
செந்தமிழ் சிதைத்து டட்லி-சிறிமா ஆட்சி கொடுமையா?
இந்தநாட்டிலே நமக்கு எந்த நாளும் மிடிமையா?
இந்நிலை தகர்த்து நிற்க ஒன்று கூடல் மடமையா?

(அடிமையா...)

மாதர் ஒன்று சேர்ந்தெழுந்து வருகிறார்களணியிலே
மக்கள் தம்மை ஏவிநின்று மகிழ்கிறார்கள் துணிவிலே
காதரும்-முகைதீனும் களத்தில் நின்று கொடியையே
கையிலேந்தும் காட்சிகண்டு கொடுமை போகும்
நொடியிலே

(அடிமையா...)

வீறு கொண்டெழுந்துநின்று வெற்றிகீதம் பாடடா
நேரில் நின்று நீதிகேட்டு நேர்மை மாலை சூடடா
ஏறு போல் எழுந்து எங்கும் எங்களாட்சிகேளடா
சேர-சோழ-பாண்டியர் தமிழ்வளர்த்த நாடடா.

(அடிமையா...)

தமிழர் மானம் போகுதே செந்தமிழின் மானம் சாகுதே
குமுறுகின்ற இளைஞர் வாழ்வில் குறைகள் வந்து சூழுதே
திமிரதோ! அடா, உனக்குத் தமிழர் என்ன நாய்களோ?
தீந்தமிழ் வளர்க்கும் கூட்டம் ஈழ நாட்டின் சேய்களோ?

(அடிமையா...)

## எதிரிகள் கோட்டையை உடைத்தது தளபதியின் சேனை

சித்தங்கேணி, ஏப். 15

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள கலைநகர் மக்கள் 7-4-70ல் ஒரு தமிழரசு கிளையை திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களைக் கொண்டு திறந்துள்ளார்கள். பதவி மோகக்காரர் சிலர் சேர்ந்து கலைநகர் வாழ் மக்களை விலைக்கு வாங்க முயற்சி செய்தார்கள். அதனை முறியடிக்கும் நோக்குடன் வடக்கிலிருந்து' பெரும் ஊர்வலம் தெற்கு நோக்கிப் புறப்பட்டு, மீண்டும் தளபதியை மேளவாத்தியத்துடன் அதேவழியாக அழைத்துவந்து எதிரிகளின் கோட்டையை வெற்றி கொண்டு கலைநகரை அடைந்தார்கள். வீரத்தமிழினத்தின் தளபதியே வாழ்க! வெல்க என்ற கோஷத்திற்கு இடையில் காரியாலயம் திறக்கப்பட்டது.

## தளபதி 15000 வாக்குகளால் வெற்றியீட்டுவார்!

சித்தங்கேணி, ஏப். 16

தளபதியின் கோட்டையாக விளங்கும், சில்லாலை, பனிப்புலம், பிராயம்பத்தை, கலைநகர், சித்தங்கேணி, அராலி பண்ணைகம் போன்ற கிராமங்களில் தமிழ்காங்கிரஸ் வேட்பாளர் சென்று தலை குனிந்து திரும்பியுள்ளார்' குறிப்பாக சில்லாலை, பனிப்புலம், பிராயம்பத்தை மக்கள் இது தளபதியின் கோட்டை இங்கே நுழையாதீர் என அவரை திருப்பி அனுப்பியுள்ளார்கள்.

இம்முறை தளபதி 15,000 அதிகப்படியான வாக்குகளால் அமோக வெற்றியீட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மூக்குடையும் மூடர்கள்

சித்தங்கேணி, ஏப். 15

தமிழ் காங்கிரஸ் கட்சியின் தேர்தலுக்கு, தேர்தல் புதிய முகங்களை வட்டுக்கோட்டை தொகுதிக்கு அறிமுகஞ் செய்து. தளபதியின் கோட்டையை உடைக்க எத்தனித்து மூக்குடைபட்டு செல்கின்றார்கள்.

சென்ற தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளராக நின்றவரும், அவரது குடும்பத்தினரும், இம்முறை தமிழரசுத் தளபதிக்கே தமது வாக்குகளை அளிப்பார்கள் என்று பேசப்படுகிறது;

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

## சர்வோதயம் பச்சை நிறப் பச்சோந்தி ஆகுமா?

# யூ.என்.பி.யிடம் 'மடிப்பிச்சை' கேட்கிறார் திரு. கதிரவேலு

கொழும்பு, ஏப். 17— தீவுப்பகுதியில் தேர்தலுக்காக முளைத்துள்ள 'சர்வோதயம்' விரைவில் பச்சையாக நிறம் மாறுமா?— இவ்வாறு கேட்கின்றனர் கொழும்புவாழ் தீவுப்பகுதி வாக்காளர்கள்!

கடந்த வாரத்தில் தீவுப் பகுதி வேட்பாளர்களுள் ஒருவரான திரு: கதிரவேலு கொழும்புக்கு வந்து திரு. அல்பிறட் தம்பி ஐயாவைக் கண்டு தம்மை ஒரு யூ. என்: பி. வேட்பாளராக ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிடுவதற்கான ஒழுங்கு செய்து தரும்படி கேட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது;

திரு: அல்பிறட் தம்பிஐயா இது விடயமாகத் தொலைபேசியில் யூ. என். பி, மேலிடத்துடன் தொடர்பு கொண்டு யூ. என்: பி. வேட்பாளராக விரும்பும் திரு. கதிரவேலுவின் 'சாதகத்தை'ப் பின்பு அவருக்குத் தெரியப்படுத்துவதாகவும் கூறி அவரை அனுப்பி விட்டதாகவும் அறியப்படுகின்றது.

அதன் பின்பு கொழும்பில் வாழும் தீவுப்பகுதி வாக்காளர் மத்தியில் ஆதரவு தேடுவதாக நினைத்துக்கொண்டு புங்குடுதீவைத் தாயகமாகக் கொண்ட இரண்டொருவர் வீட்டுக்கு இரவு சுமார் 2 மணியளவில் சென்று தேர்தலில் தம்மை ஆதரிக்கக் கேட்டுள்ளாராம்.

நித்திரைத் தூக்கம் கலைந்து போகக் காரணமான திரு. கதிரவேல் 'அவர்களை உள்ளே'அழைத்து உட்காரச் சொல்லக்கூட மனமில்லாத அவர்கள் அவர் சொன்ன வற்றிற்கெல்லாம் 'ஓம்' கூறி அவரை அனுப்பி விட்டதாக அறியப்படுகின்றது.

சங்கப் புலவனை நினைவூட்டும் தங்கத்தமிழன் இரத்தினமே 'சிங்கத்தின்' சக்தியான சிங்கள ஆட்சியாளரை அடக்கக் கூடியவன். பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களே ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு மக்கள் தெரிவு செய்யக்கூடிய தகுதியுள்ளவர்......... என்றெல்லாம் திரு. கதிரவேலவர்களால் எழுப்பி விடப்பட்ட மக்கள் அன்றிரவு முழுவதும் கதைத்தார்களாம்.

திரு. கதிரவேலுவின் ஆதரவு தேடும் நிலையையும்— நேரத்தையும் எண்ணி இன்றைக்கும் அம்மக்கள் சிரிக்கின்றனர்.

## கேட்கிறேன் ஒரு கேள்வி

தமிழரசுக் கட்சிக்காரன் நம் ஊருக்குச் செய்து தந்த நன்மை என்ன? பாதை போட்டுத் தந்தானா? பள்ளிக்கூடம் கட்டிக் கொடுத்தானா? ஆலை சமைத்தானா? பாலம் சமைத்தானா? நாடாளுமன்றத்துக்குத் தமிழரசுக் கட்சிக்காரன் போனதால் நாட்டுக்கென்ன நன்மை? என்று கேட்கிறார்கள் நாட்டிலே சிலர்!

தமிழுரிமையும் தமிழர்தம் மானவாழ்வுமே எங்களுக்குத் தலையாய முதற்கடமையாக தெரியும் வேளையில் பாலமும் பள்ளிக்கூடமுமே அவர்களுக்கு முக்கியமாகப் படுகிறது.

விலைமதிப்பற்ற கற்பை மானத்தை விற்று வீடு கட்டிப் பெருமைப்பட்ட விபச்சாரியைப்போல— உலகெலாம் ஆண்ட ஒப்பில்லாத தமிழினத்தின் உரிமைகளை விற்று ஊருக்கு நாலு வீதியும் பாலமும் கேட்கிறார்கள் உணர்ச்சியற்றோர்!

பச்சைத் துரோகிகளான இவர்களைப் பார்த்து பாலங்களும் பாதைகளும் பள்ளிக்கூடங்களும் மட்டும்தானா ஒரு நாடு என்று நான் கேட்க விரும்புகிறேன்;

ஏற்கெனவே அமைந்த எழிலான பாதைகளும் பாலங்களும் பள்ளிக்கூடங்களும் நிறைந்த வடவியட்நாமின் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசுகின்றபோது அந்தப் பாலங்களும் பள்ளிக்கூடங்களும் நொறுங்கிச் சிதறித் தூள் தூளாகின்றன அங்கே!

வடவியட்நாம் மக்கள் உடனே தங்கள் தலைவர்களிடம் போய் அழகான பாதைகள் பாலங்கள் பள்ளிக்கூடங்களெல்லாம் நொறுங்கி நாசமாகின்றன—நாம் போராட்டத்தை நிறுத்தி அமெரிக்கர்களின் காலில் விழுந்து அடிமைகளாக வாழ்வோம்— நமக்குப் பாதைகளும் பள்ளிக்கூடங்களும் பாலங்களும்தான் முக்கியம் என்று கூறவில்லை.

இருக்கின்ற பாதைகள் பாலங்கள் பள்ளிக்கூடங்கள் அழிவதைப் பற்றிக் கூடக் கவனிக்காமல் அவர்கள் மானத்துக்காகப் போராடுகிறார்கள் அங்கே! மானத்தைப் பறிகொடுத்து எப்படியோ ஊருக்கு நாலு மதகுகள் பாதைகள் பள்ளிக்கூடங்கள் கட்டிவிட வேண்டும் என்று துடிக்கிறார்கள் மானங்கெட்ட இவர்கள் இங்கே!

தமிழரசுக் கட்சிக்காரர்கள் ஒருபோதுமே மாற்றார்க்குத் தாள்பிடித்து வால்பிடித்து பாதைகளும் பாலங்களும் பள்ளிக்கூடங்களும் கட்டமாட்டார்கள் என்பதை உணர்ச்சி கெட்டோரே உணர்ந்து கொள்ளுங்கள்.

உரிமைப் போரை நடத்திக் கொண்டே அதே வேளையில் உங்கள் ஊருக்கும் ஏதாவது நன்மை செய்ய முடிந்தால் அவர்கள் செய்து தருவார்களே தவிர...... உரிமைகளை அடகுவைத்து உங்களுக்கு அவர்கள் மாற்றானின் பிச்சையில் உபசரிப்பு நடத்த மாட்டார்கள்.

பாதைகளும் பள்ளிக்கூடங்களும் பாலங்களுந்தான் முக்கியம் என்று பறைசாற்றும் துரோகிகளே உங்கள் பரம்பரைகளுக்கு நீங்கள் எவ்வளவு பாதகம் புரிகிறீர்கள் என்பதை கொஞ்சமாவது எண்ணிப் பார்த்தீர்களா?

எழில் தமிழ் ஆளர்,
செ. இராசதுரை.

### யூ. என். பி.-தயிழரசு ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளைப் பெற முயற்சி செய்கின்றது. இது பகற்கனவாகவே முடியும்.

தமிழரசு கட்சியால் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாது என்று புதிய அரசியல் ஞானோதயம் பிறந்திருப்பது போன்று பிரதமர் திரு: டட்லி சேனநாயகா கிழக்கு மாகாணத்தில்பிரசாரம்செய்திருக்கிறார்; நாம் என்றும் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியும் என்று சொன்னது கிடையாது.

இலங்கையின் அரசியல் அமைப்பின்படி நாம் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியாது என்பது எமக்கு தெரியும், ஆனால் சில சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை கட்சிகளில் ஒன்று எமது உதவியுடன்தான் அரசாங்கம் அமைக்க இயலும்.

கடந்த பொது தேர்தலையடுத்து இதுதான் நடைபெற்றது, 1960ம் ஆண்டு மார்ச் பொது தேர்தலின் பின்னரும் இதே சூழ்நிலை உருவாகி நாம் ஒத்துழைப்பு கொடுக்காமையினால் ஐ. தே. கட்சிக்கு அரசாங்கம் அமைக்க முடியாது போய் விட்டது.

திரு, சேனநாயகாவின் சம்பவ கால நடவடிக்கைகள் தமிழரசுக் கட்சிக்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையிலுள்ள சிநேகித மனப்பான்மையை அறவே நீக்கிவிட்டது.''

### வடக்கே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் போட்டியிடும் தொகுதிக்காவது தனிச் சிங்கள ஊழியர்களை அனுப்பும்படி மன்றாடிக் கேட்டுள்ளாராம்.

தமிழ் அரசாங்க ஊழியர்களை அனுப்பினால் அவர்கள் தமிழரசுக்கட்சிக்கு சாதகமாக இயங்கக் கூடும் என்று இவர் தேர்தல் ஆணையாளரிடம் எடுத்துரைத்தாராம்.

வடக்கே மட்டுமல்லாது கிழக்கில் யூ. என். பி. போட்டியிடும் தொகுதிகளுக்கும் தமிழ் ஊழியர்களை அனுப்பாது சிங்கள ஊழியர்களை அனுப்புவதே சாலச்சிறந்தது என்றும் இவர் கூறியதாக அறியப்படுகிறது:

வாலறுந்த நரியாரின் அவலநிலை கண்டு தமிழ்ப் பேசும் மக்கள் கைகொட்டி நகைக்கிறார்கள்!

### தமிழ்பகுதிகளில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட எலலா வகைகளிலும் சமத்துவம் அளிக்கும் கட்சிக்குத்தான் சமஷ்டி கட்சியின் ஆதரவு இருக்கும் என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.

தமிழ் காங்கிரஸ் என்ற சிறிய அமைப்புசேனநாயக்க கட்சியுடன் தொகுதி உடன்பாடு செய்து கொண்டிருக்கிறது. எனினும் தமிழர் வாழ் பகுதிகளில் சமஷ்டி கட்சிக்குத்தான் பெரும்பான்மை ஆதரவு கிடைக்குமென்பது விஷயம் அறிந்தவர்களின் மதிப்பீடு.

## மேல் சபையில் தி. மு. க தனி பெரும் கட்சியாகிறது

சென்னை, ஏப்: 13

மேல்சபையில் தேர்தலுக்குப் பின்னர் தி. மு. க. அதிக மெம்பர்கள் உள்ள கட்சியாக ஆகியிருக்கிறது. பழைய காங்கிரஸ் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றுள்ளது.

மூன்று நியமன மெம்பர்கள் தி. மு. க. ஆதரித்த சில சுயேச்சைகள் உட்பட தி. மு. க. பலம் தற்போது 28. தேர்தலுக்கு முன்பு அதன் பலம் 20.

பழைய காங்கிரஸ் பலம் 23 லிருந்து 19 ஆகக் குறைந்து விட்டது. புதிய காங்கிரஸ் மூன்று ஸ்தானங்களில் இரண்டை இழந்து விட்டது.

சுதந்திர கட்சியின் பலன் 2 லிருந்து 4 ஆக அதிகரித்துள்ளது.

முதல் தடவையாக பி. சோ. கட்சிக்கு மேல் சபையில் ஒரு ஸ்தானம் கிடைத்திருக்கிறது.

ஏப். 20க்குப் பின்னர் 63 மெம்பர்கள் கொண்ட மேல் சபையில் கட்சி பலா பலம் கீழ்கண்டவாறு இருக்கும்: தி. மு. க.-28; பழைய காங்கிரஸ் 19, புதிய காங்கிரஸ் 1, ஐக்கிய கட்சி 3; சுதந்திரா 4; முஸ்லிம்லீக் 1; காமன்வீல் 1, தமிழரசு கழகம் 1, பி; சோ. கட்சி 1; சுயே 4;

புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் ஏப். 20ல் பதவி ஏற்கின்றனர்.

## வீரகேசரியின் 'நடு நிலைமை' இலட்சணம்!

(கொழும்பு நிருபர்)

குட்டி அரசியற் கட்சியான தமிழ் காங்கிரஸ் தலைவரது செய்திக்கு முதலிடம். ஆலமரம் போல் பரந்து படர்ந்து ஈழத்தமிழினத்துக்கு வழி காட்டும் தமிழரசுக் கட்சித் தலைவர் விடுக்கும்செய்திக்கு இரண்டாமிடம்! இதுதான் வீரகேசரி கடைப்பிடிக்கும் ''நடுநிலைமை'' இலட்சணம்!

வீரகேசரி தமிழ் காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமான பிரசார ஏடா? என்று தமிழ் மக்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்:

தமிழ் புத்தாண்டு தினத்தையொட்டி வீரகேசரி 14-4-70-ல் தமிழரசுத் தந்தை, தமிழ் காங்கிரஸ் தலைவர்— இருவரது செய்தியையும் முன்பக்கத்தில் பிரசுரித்திருந்தது. ஆனால் முதலில் மேலே முக்கியத்துவம் கொடுத்து பொன்னம்பலத்தின் செய்தி—அதன் கீழே தான் தமிழரசுத்தந்தையின் செய்தி. இது தான் வீரகேசரி பின்பற்றுவதாக கூறும் நடு நிலைக்கொள்கையின் 'இலட்சணம்'!

தமிழ் மக்களிடையே செல்வாக்கற்ற தமிழ் காங்கிரஸ் தலைவரின் கூலிக்கு மாரடிக்கும் இப்போக்கை வீரகேசரி திருத்திக்கொள்ளத் தவறினால்—வீரகேசரியும் தனது செல்வாக்கை இழப்பது நிச்சயம் என்று தமிழ் மக்கள் கூறுகிறார்கள்.

வீரகேசரி தனது பாரபட்சமான போக்கை மாற்றாவிட்டால் வீரகேசரி ஆசிரியர் குழுவுக்குள் பொன்னம்பலத்தின் முதுகைத்தடவி இடம் பிடித்திருக்கும் ஒரு சிலரது செய்திகள் 'பிரகாசம்' ஆக்கப்படும் என்று சுதந்திரன் முன் எச்சரிக்கையுடன் கூறிக்கொள்ள விழைகிறது.

## பட்டிருப்பில் பயங்கர படகு விபத்து!

களுவாஞ்சிக்குடி ஏப்- 11. பட்டிருப்பு தொகுதியை சேர்ந்த மண்டூர், குறுமண் வெளித்துறையில் ஒருபெண் மணி உட்பட ஐந்துபேர் பிரயாணம் சென்றதோணி ஒன்று புதன்கிழமை இரவு $7\frac{1}{2}$ மணி அளவில் கவிழ்ந்ததால் ஒருவர் நீரில் அமிழ்ந்து விட்டதாகவும், நால்வர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

ஒருபெண்மணி உட்பட ஐவர் இந்த தோணியில் புதன்கிழமை இரவு 7 மணி அளவில் குறுமண் வெளித்துறையில் இருந்து பிரயாணம் செய்தனராம், மண்டூர் துறையை தோணி அண்மித்துக்கொண்டிருக்கும்போது திடீர் என தோணி கவிழ்ந்ததாம். உடனே தோணியில் இருந்தவர்கள் நீரினுள் அமிழ்ந்து விட்டார்களாம். ஆனால் பிரயாணம் செய்தவர்களில் ஒருபெண்மணி உட்பட நால்வர் உயிர் தப்பியதாகவும் ஒருவர் நீரில் அமிழ்ந்து விட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ இல்லத்தில் 1970.ம் வருடம் ஏப்பிரல் மாதம் 17-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆசிரியர்: கோவை மகேசன்